MAY 2023 **U/ID 33201/UCT1A**

Time : Three hours Maximum : 75 marks

பகுதி அ — ($10 \times 2 = 20$ மதிப்பெண்கள்)

எவையேனும் பத்து வினாக்களுக்கு 30 சொற்களில் விடைதருக.

1. பாரதியின் இல்லறம் குறித்து எழுதுக.

2. பாரதியின் முப்பெரும் பாடல்கள் யாவை?

3. குயில்பாட்டின் மொழிநடை சிறப்பை எழுதுக.

4. பாவேந்தர் படைப்பு குறித்து வையாபுரிப்பிள்ளையின் கருத்தினை எழுதுக.

5. பாரதிதாசனின் புனைப்பெயர்களை எழுதுக.

6. பாரதிதாசன் பணியாற்றிய இதழ்கள் சிலவற்றை எழுதுக.

7. மூலதனம் கவிதையின் மையக்கருத்தை எழுதுக.

8. இரட்டைக்காப்பியம் எனும் புதுக்கவிதை நயத்தை விளக்குக.

9. வினாவடிவக் கவிதை அமைப்பை குறிப்பிடுக.

10. ஹைக்கூ என்பதன் இலக்கணம் யாது?

11. சொல்லதிகாரம் கவி உணர்த்தும் சொற்பொருளை எழுதுக.

12. கண்ணீர் பூக்களின் தன்னம்பிக்கை குறித்து குறிப்பிடுக.

பகுதி ஆ — ($5 \times 5 = 25$ மதிப்பெண்கள்)

எவையேனும் ஐந்தனுக்கு 200 சொற்களில் விடை தருக.

13. பாரதியின் விடுதலைப் போராட்ட நிகழ்வை விளக்குக.

14. குயிலின் காதல் கதையை எழுதுக.

15. அழகின் சிரிப்பு காட்டும் புறாக்களின் ஒழுக்கம் குறித்து விளக்குக.

16. உதாரனனின் குணநலனை எழுதுக.

17. ஐங்குறுநூறும், கலித்தொகையும் புதுக்கவிதையாகும் திறத்தை விளக்குக.

18. நா. காமராசனின் வசனகவிதை அழகினை விளக்குக.

19. 'வாழைமரத்தின் சபதம்' எனும் கவிதை உணர்த்தும் பண்புநலனை விளக்குக.

பகுதி இ — (3 × 10 = 30 மதிப்பெண்கள்)

எவையேனும் மூன்றனுக்கு 500 சொற்களில் விடை எழுதுக.

20. பாரதியின் வாழ்வியல் நிலையை கட்டுரைக்க.

21. உதாரன் அமுதவல்லியின் காதல் நிலையை விவரிக்க.

22. தேவாரமும், தொல்காப்பியமும் ஒப்புமையடையும் தன்மையை விவரிக்க.

23. ஈரோடு தமிழன்பனின் கவி ஆளுமையை புலப்படுத்துக.

24. வைரமுத்துவின் படைப்பாளுமையை கட்டுரைக்க.

———————